1970 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனை என்ருல் ஆயுள் முழுவதும் தண்டனை இருக்க வேண்டுமென்று சட்டம். 20 ஆண்டுக் காலம் தண்டனை விதிக்கப்படுகிறது. 3-ல் 2 பங்கு வயதிலே அவர்கள் தண்டனை கழித்து விட்டால் "அட்வைசரி போர்டு" க்கு அனுப்பி பரிசீலித்து, அதற்குப் பிறகு அவர்களை விடலாம் என்று திட்டம் இருக்கிறது. இன்னொரு விதியின் அடிப்படையில் முதிய வயதானவர்களாக இருந்தால் அவர்களையும் முதிய வயது என்ற காரணத்திற்காக "அட்வைசரி போர்டு"க்கு அனுப்பி அவர்களை சிபார்சு செய்தால் விடுதலை செய்யலாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஆயுள் தண்டனை என்பதற்கும், ஜீவாந்திர சிட்சை என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன, கால வரம்பு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனை என்பதற்கும், ஜீவாந்திர சிட்சை என்பதற்கும் மொழி வேறு என்பதைத் தவிர வேறு வித்தியாசம் இல்லை.

திரு. என். வரதராஜன் : ஒரு நீண்ட தண்டனை பெறும் ஆயுள் கைதிகளுக்கு 7-8 ஆண்டுகளுக்கு பின்னுலே சலுகை தருவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கும் விதி முறையில் அவர்கள் பொறுப்பில் "கான்விக்ட் வார்டு" என்று சொல்கிருர்கள். அவர்களுக்கு ஏராளமான சலுகைகள் இருப்ப தாகத்தான் என்னுடைய சிறை அனுபவம் சொல்கிறது.

திருச்சி பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் மகாநாடு

* 98 வினு.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வழக்குகளை துரிதமாக பைசல் செய்வதற்கு குற்ற சட்டங்களில் உள்ள சில குறைபாடுகளை அகற்ற வேண்டுமென்று; 1969 அக்டோபரில் திருச்சியில் நடந்த தமிழக பப்ளிக் பிராசிக்யூட் டர்களின் மகாநாட்டில் யோசனை சொல்லி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(இ) ஆம் என்ருல், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) இம்மாநில அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், அரசு குற்றவியல் கூட்டு வழக் குரைஞர்கள் மாநாடு 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் திருச்சி ராப்பள்ளியில் நடைபெற்றது. சட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்யவும் குற்றவியல் சட்டம் விதிக் கோவை ஆகியவற்றில் செய்யத்தக்க திருத்தங்கள் குறித்து பரிவுரைகள் செய்யவும் குழு ஒன்றை அமைத்து அம்மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அரசு குற்றவியல் வழக்குரைஞர்களின் அடுத்த மாநாட்டில் இப் பரிவுரைகள் கிடைக்கும். இப்பரிவுரைகள் கிடைத்தபின்னரே அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க இயலும்.